# உயிரினும் மேலான...

வேரோடு மண்ணில் விளைகின்ற பொருளே
விலை பேசி யாரும் விற்காத அமுதே
போராடிப் போராடி பெறுகின்ற உயிரே
புலிவீரர் நெஞ்சத்தில் பொழிகின்ற திருவே

உயிரினும் மேலான தாய்நாடு
இன்று உடலங்கள் எரிகின்ற பேய்வீடு
பயமின்றி நாம் வாழ்ந்த சிறுகூடு
இன்று பாதகரால் சிதைந்த மண்வீடு

– உயிரினும்...

ஊரெங்கும் அகதியென்று திரிவாயா
இல்லை உயிரென்ன பெரிதென்று நிமிர்வாயா
போரென்று புலியோடு வருவாயா
இன்னும் புறம்போக்கு நிலம்போல இருப்பாயா

– உயிரினும்...

சாவுக்கு பயந்தோடி திரிவாயா
உந்தன் தாய்நிலம் விழும்போது சிரிப்பாயா
நாவுக்கு பதமாக கதைப்பாயா
இல்லை நானுமோர் புலியென்று வருவாயா

– உயிரினும்...

துணிவோடு நீ வந்து படைசேரு – புலி
துளியேனும் நிலைமாறிப் போகாது
அணியாகிப் புலியாகிப் போராடு
நீ அழிவாகிப் போனாலும் வரலாறு

– உயிரினும்...